**கொழும்பு மாநகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூலை 29 திகதியும் சபைக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கொழும்பு மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபார விளம்பரங்கள் மற்றும் விளப்பரப் பலகைகளுக்கான பற்றுச் சீட்டுக்களின் பிரகாரம் வருமானம் ரூபா 23,057,954 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 35,315,519 தொகை எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் அவ் வருமானம் ரூபா 12,257,565 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | பற்றுச் சீட்டுகளின் பிரகாரம் அறவிடப் பட்ட வருமானத்தை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணினி மயப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம் வியாபார விளம்பரங்கள் மற்றும் விளம்பரப் பலகை வருமானம் ரூபா. 35,315,519 தொகை ஆகும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வங்கி மேலதிகப் பற்று வட்டி ரூபா 50,066,731 தொகை எனினும் அவை ரூபா 44,396,646 தொகை எனப் பதிவு செய்யப்பட்டி ருந்தமையால் அந்தச் செலவு ரூபா 5,670,085 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டுக் கொள்கைகளின் படி அட்டுறு அடிப்படையில் கணக்கீடு மேற்கொள் ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் கணக்கீட்டின் போது பதிவு செய்தல் மற்றும் இனங்காணல் நிதிக்கூற்றுக்களில் அவை நடைபெறும் காலப்பகுதியுள் | வங்கி கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வங்கி மேலதிகப் பற்று வட்டி கணக்கீடு செய்யப்படுவது தொடர்ந்து வரும் மாதத்திலேயே ஆகும். அதன் பிரகாரம் 2018 திசெம்பர் மாதத்திற்கான கொடுப்பனவு 2019 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட வேண்டும். | |
| (இ) | பெற வேண்டிய சபை அமர்வுக் கொடுப்பனவு ரூபா 10,325,063 தொகை எனினும் கடன்பட்டோரின் கீழ் அவை ரூபா 15,095,063 எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய சபை அமர்வுக் கொடுப்பனவு ரூபா 4,770,000 தொகை இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற் கான சபை அமர்வுக் கொடுப்பனவு ரூபா 22,200,063 தொகை ஆகக் காணப்பட்ட துடன் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 11,875,000 தொகை மற்றும் 2019 ஜனவரி மாதம் ரூபா 10,320,063 தொகை மீளளிப்புச் செய்யப்பட்ருந்தது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக பெற வேண்டிய சபை அமர்வுக் கொடுப்பனவு ரூபா 10,325,063 ஆகும். கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் கொடுக்கல் வாங்கல் மற்றும் சம்பவங்கள் கணக்கீட்டின் போது பதிவு செய்தல் மற்றும் இனங்காணல் நிதிக் கூற்றுக்களில் அவை நடைபெறும் காலப் பகுதியுள் மேற்கொள்ள ப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான மீளளிப்புச் செய்வதற்காக அனுப்பப்பட்ட சபை அமர்வுக் கொடுப்பனவுத் தொகை ரூபா 22,220,063 தொகையாகக் காணப்பட்ட துடன் 2018 திசெம்பர் 31 திகதி அளவில் மீளளிப்புச் செய்து அனுப்பப்பட்ட தொகை ரூபா 7,125,000 ஆகும். அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதி அளவில் பெற வேண்டிய தொகை ரூபா 15,095,063 ஆகும். |
| (ஈ) | ஆசிய அபிவிருத்தி வங்கி கடனிற்கான வட்டி தொடர்பான கடன் கொடுத்தோர் ஒதுக்கம் ரூபா 56,085,230 தொகை எனினும் கடன் இலக்கம்: 3348 மற்றும் 3349 ஆக 2018 மே 16 திகதி முதல் 2018 திசெம்பர் 31 திகதி வரை வட்டி செலுத்துவதற்காக கடன் கொடுத்தோர் ஒதுக்கம் மேற்கொள் ளப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் இலக்கம் 3348/3349 இற்காக கடன்கொடுத்தோர் ஒதுக்கம் ரூபா 56,085,230 தொகை என கணக்காய்வில் சுட்டிக் காட்டியது சரியானதாகும். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 31 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள பெறுமதி மற்றும் உரிய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளில் இடையே ரூபா 360,089,515 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அவ்வித்தியாசத்துக்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய மீதிகளில் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிவேடுகளில் பதிவு செய்யும் போது ஏற்பட்டிருந்த குறைபாடுகள் காரணமாக வித்தியாசங்கள் ஏற்பட்டிருந்தன. |

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 11,287,600 தொகையான 23 பெற வேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த மீதிகளை பதிவழிப்பதற்கு அல்லது கணக்குகளை சரிசெய்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டு வருவதுடன் விரைவாக இந்த மீதிகளின் விபரங்களை தேடிப் பெற்று தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | பல வருட காலம் முதல் இடையறாது நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய உத்தியோகத்தர் களுக்கு வழங்கியிருந்த சிறு காசு மற்றும் விஷேட முற்பணக் கணக்குகளில் தீர்க்கப்படாதிருந்த ரூபா 3,185,604 இற்கான மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த தொகை தொடர்பாக விரிவான தகவல்கள் கண்டறிவதற்கு முடியாதுள்ளது. இது வரை அந்த மீதி ரூபா 3,185,604 வரை குறைவடைந்துள்ளது. தொடர்ந்தும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (இ) | சபைக்கு கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் மீதிகளில் செயற்படாத 3006 கணக்குகள் தொடர்பாக ரூபா 410,084,815 இற்கான பெறுமதி ஒன்றும் காணப்பட்டது. | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த மீதியை அறவீடு செய்ய முடியாமையால் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 18 வருடங்கள் முன்னர் இருந்து காணப்படும் செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 99,848,922 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2001 ஆண்டுக்கு முன்னர் இருந்து காணப்படும் மீதி ஒன்றாக காணப்பட்டதுடன் 2001 ஆண்டிற்கு முன்னர் கொழும்பு மாநகர சபையில் பிணை வைப்பு செய்ய வேண்டிய சேவைகளை சேர்ந்த பதவிகளுக்கான பிணை இந்த கணக்கில் காணப்படுகின்றது. அதனை பதவியணியினர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் தீர்க்க முடியும். |
| (உ) | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட ரூபா 20,765,810 இற்கான வரித்தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப் படாமல் செலுத்தப்பட வேண்டிய வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்நாட்டு இறைவரித் திணைக்கள உத்தியோகத் தருடன் கலந்துரையாடி சரிசெய்ய வேண்டிய முறையை அவர்களின் ஆலோசனைகளுடன் செயற்பட்டு இந்த நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். |

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 2,129,338,446 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு/ மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | | |
| (அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 261 | ரூபா. 214,628,002 | வீதவரி செலுத்தாமையால் விற்பனை செய்யப்பட்ட காணிகளை கொள்வனவு செய்வதற்காக சபைக்கு உரிய அதிகாரத்தை செயற்படுத்தியிருக்கவில்லை. | வீதவரி செலுத்தாமையால் காணிகளை கொள்வனவு செய்வதற்காக சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயற்படுத்த வேண்டும். | வீதவரி செலுத்தாமையின் மீது நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக நகர சபை கட்டளைச் சட்டத்தின் படி தடைசெய்யப்படும் ஆதனங்களுக்காக அந்த ஆதனங்களின் இறுதியாக உரிமை கோரும் காணி உறுதி சான்றிதழ் மற்றும் வரைபுகள் பெற்றுக் கொள்வதற்கு முடியாமையால் விற்பனைச் சான்றிதழ் எழுதுவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் | -- | வீடுகளை வகைப்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் எதிர்பார்ப்பு பதிவேட்டில் விண்ணதாரர்களின் பெயர் உட்படுத்தப்பட்டு அந்த தொடர்முறையின் படி வீடுகள் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்பார்ப்புப் பதிவேட்டில் உட்படுத்தி அதன் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட உத்தியோக பூர்வ வீடுகள் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் எதிர்காலத்தில் அனுப்பி வைக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நி.பி.371(6) | ரூபா. 3,185,604 | சிறுகாசு கட்டுநிதிகள் உரிய நிதி ஆண்டின் போதே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிறுகாசு கட்டு நிதிகள் உரிய ஆண்டின் போதே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணினி மய கணக்கீட்டு முறைமையின் ஆரம்பத்தில் 2001 வருட இறுதியில் உள்ளவாறு தீர்க்கப் படாத முற்பண மீதி களை இனங்கண்டு தீர்த்திருக்காத மீதி ரூபா 3,185,603 தொகை ஆகக் காணப்பட்டதுடன், இந்த கொடுக்கல் வாங்கல்களை இனங்காண முடியாமையால் தீர்க்கப்படாது இது வரை முன்கொண்டு வரப்பட்ட மீதியாகும். |
| (ii) நி.பி.396(ஈ) | ரூபா 11,901,074 | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாத காலத்தை மிகைத்துள்ள காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்கப்பட்ட ஆனால் சமர்ப்பிக் கப்படாத சுமார் 06 மாதங்களை கடந்துள்ள காசோலைகளை நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 06 மாதங்களை மிகைத் துள்ள ரூபா 11,901,074 தொகை காசோலைகள் 03 கொடுப்பனவுக் கணக்குகள் தொடர்பு டையவை ஆகும். இந்த காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (iii) நி.பி.1646 | -- | 04 பெரும்பாக அலுவலகங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 1987.09.20 திகதிய 08 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றறிக்கை | ரூபா. 752,787,502 | கணக்கில் காணப்பட்ட தொகையில் இருந்து இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட இனங்கண்ட செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். | இது வரை நகர அபிவிருத்தி அதிகார சபைக் கணக்கில் காணப்படும் பணத்தில் பல செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு இருந்ததுடன் எதிர் காலத்தில் அது தொடர்பாக உரிய அங்கீகாரத்தை பெற்று செயற்படுத்து வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என கருணையுடன் அறிவித்துக் கொள்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,312,992,879 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,382,289,817 தொகையாக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 02 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக ரூபா 24,080,596 தொகைக்கான நேர்செலவு வைத்தல் மற்றும் பிழையாக செலவு வைத்தல், 5 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக ரூபா 14,760,003 தொகைக்கான நேர் வரவு வைத்தல் மற்றும் பிழையாக வரவு வைத்தல் என்பவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நேர் செலவு வைத்தல் மற்றும் பிழையாக செலவு வைத்தலும், நேர் வரவு வைத்தல் மற்றும் பிழையாக வரவு வைத்தல் என்பவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நேர் வரவு வைத்தல் மற்றும் நேர் செலவு வைத்தல் என்பவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படு கின்றது. |
| (ஆ) | 04 நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட 01 முதல் 03 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 3,061,800 தொகைக்கான தேறப்படாத காசோலைகள் தொடர்பாக எதுவித நடவடிக்கை யும் எடுத்திருக்கவில்லை. | தேறப்படாத காசோலைகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வைப்புச் செய்யப்பட்ட தேறப்படாத காசோலைகள் தொடர்பாக உரிய பிரிவு களுக்கு அறிவூட்டியதுடன் எதிர்காலத்தில் இந்த வருமானம் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக கருணையுடன் அறிவிக்கின்றேன். |

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 வீதவரியும் வரியும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| (i) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வீதவரி ரூபா 3,203,546,484 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 500,000 தொகை இனை மிகைத்துள்ள 753 ஆதனங்கள் தொடர்பான நிலுவை வீதவரியின் பெறுமதி ரூபா 1,507,225,518 தொகை ஆகும். அது மொத்த நிலுவையில் 47 சதவீதம் ஆகும். | ரூபா 500,000 மிகைத்துள்ள 753 ஆதனங்கள் தொடர்பாக தொடர்ந்தும் அறவிடப் பட வேண்டிக் காணப்பட்ட நிலுவை வீதவரியினை அறவீடு செய்வதற்கு மற்றும் தொடர்ந்து அறவிடப் படாமல் காணப்படும் ஆதனங்களுக்காக கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையை அறவீடு செய்வதற்காக வருமானப் பரிசோதகர்களுக்கு எழுத்தாணை வழங்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் அறவிடப்படாமல் காணப்படும் ஆதனங்கள் தொடர்பாக ஏலவிற்பனை செயற்பாட்டினை கடைபிடிப் பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (ii) | ரூபா 500,000 ஐ விட மிகையான நிலுவை வீதவரி ஆதனங்களில் 188 அரச ஆதனங்கள் தொடர்பான மொத்த வீதவரித் தொகை ரூபா 527,578,658 ஆகக் காணப்பட்டது. இது ரூபா 500,000 மிகையான நிலுவை வரி ஆதன தொகையில் 35 சதவீதமாகக் காணப்பட்டதுடன் மொத்த நிலுவை வீதவரி வருமானத்தின் 16 சதவீதம் ஆகும். | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு மற்றும் பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றது. |
| (iii) | ரூபா 500,000 இனை விட மிகையான நிலுவை மீதிகள் காணப்படும் ஆதனங்களில் 2018 ஆண்டின் போது வீதவரி ஏதும் செலுத்தப்படாத ஆதனங்கள் 483 காணப்பட்டதுடன் அவற்றில் மொத்த நிலுவை தொகை ரூபா 1,062,303,345 தொகையாகும். | நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு மற்றும் பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | சபையில் தற்போது காணப்படும் தகவல் தொழில்நுட்ப செயலாற்றல் (AS400) முறைமை யில் பெறுமதி மதிப்பீடு செய்தல் தொடர்பாக விடயப் பரப்பு அடங்கியிருந்த போதிலும் அந்தப் பரப்பினை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | தகவல் தொழில்நுட்ப செயலாற்றல் முறைமையில் பெறுமதி மதிப்பீடு செய்வது தொடர்பான விடயப் பரப்பை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இதனைக் கணக்கீட்டு கணினி முறைமையுடன் தொடர்பு படுத்தி பெறுமதி மதிப்பீட்டு அலுவல்களை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (v) | ரூபா 10,000,000 ஐ விட மிகையான வீதவரி செலுத்து வோரின் எண்ணிக்கை 25 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 19 பேர் ஆண்டின் போது வரி ஏதும் செலுத்தியிருக்கவில்லை. அந்த மொத்த நிலுவை வீதவரித் தொகை ரூபா 349,501,700 தொகை ஆகும். | நிலுவை வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஆ) வியாபார வரி மற்றும் தொழில்வரி**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது தொழில் வரி மற்றும் வியாபார வரியாக ரூபா 65,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ஆண்டின் போது அறவிடப்பட்டிரு ந்தது ரூபா 13,295,000 தொகை மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 34,523,750 இல் ரூபா 21,228,750 தொகை 2018 ஆம் ஆண்டிற்குரியவை அல்லதாக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான மொத்த வருமானத்தில் இறுதிக் கணக்குகளின் மூலம் பிரதிபலித்தது 38 சதவீதம் மாத்திரமே. | ஆண்டிற்கான தொழில் வரி மற்றும் வியாபார வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வருமான அறவீடுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மேல்மாகாண உள்ளுராட்சித் திணைக்களத்தின் 1996 ஒக்தோபர் 01 ஆம் திகதிய 39/96 கொண்ட சுற்றறிக்கையின் மூலம் ஆண்டிற்கான வரித் தொகை குறிப்பிட்ட வருடத்திலேயே சேகரிப்பதற்கு அவற்றின் நிர்வாக தலைவர்கள் செயற்பட வேண்டும் என சுட்டிக் காட்டிய போதிலும் கொழும்பு மாநகர சபையினால் தொழில் வரிகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வரித்தொகை வினைத் திறனுடன் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) களியாட்ட வரி**

| | | |
|---|---|---|
| கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 2018 ஆண்டின் போது நடாத்தப்பட்ட களியாட்டங்கள், இசை கச்சேரிகள், விளையாட்டுப் போட்டிகளுக்காக அறவிடப்பட்ட களியாட்ட வரித் தொகை ரூபா 128,911,243 தொகை காணப்பட்டதுடன், மேல்மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தின் மீது ரூபா 27,571,533 இற்கான களியாட்ட வரி விடுவிக்கப்பட்டிருந்தது. விடுவிக்கப்பட்டிருந்த வரி நூற்றிற்கு 21 சதவீதம் ஆகும். | வரி விடுவிப்புப் பணம் சமூக உபசரணைக்காக பயன்படுத்தப்பட்டதென சான்றிதழ் சமர்ப்பிக்கப் பட வேண்டும். | மேல்மாகாண பிரதான அமைச்சரினால் அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் 2018 ஆண்டின் போது ரூபா 27,571,533 தொகை ஒன்று களியாட்ட வரியில் இருந்து விடுவிப் பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |

**2.3.2 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீட்டு வாடகை** | | |
| வீட்டுத் தொகுதிகளில் இருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகை 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 10,554,133 தொகை காணப்பட்டது. இந்த வீட்டுத் தொகுதிகளில் கணிசமான அளவு வீடுகளில் இருந்து நீண்டகாலம் முதல் வாடகை அறவிடப்படாமல் காணப்பட்டதுடன் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. இந்த நிலுவையாக உள்ள வீடுகளின் எண்ணிக்கை யில் அரைப்பங்கிற்கு கூடுதலான எண்ணிக்கையான வீடுகளில் இருந்து 10 வருடங்கள் மிகையாக காலம் முதல் மாதாந்த வாடகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) அங்காடிக் கடை வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு அறவிடப்பட வேண்டிய அங்காடிக் கடை வாடகைத் தொகை ரூபா 431,604,720 தொகை ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 112,243,332 இற்கான செயற்படாத அங்காடிக் கடை வாடகையும் உள்ளடங்கி இருந்தது. அதன் பிரகாரம் பெற வேண்டிய மொத்த அங்காடிக் கடை வாடகையில் 30 சதவீதம் அறவீடு செய்வதில் நிச்சயமற்ற தன்மை ஒன்று காணப்பட்டது. | நிலுவை கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான சான்றுகள் மற்றும் தகவல்களை பெற்று இந்த நிலுவைத் தொகை தொடர்பாக மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ii) | 2018 ஆண்டின் போது சிட்டையிடப் பட்ட அங்காடிக் கடை வாடகை ரூபா 114,624,141 தொகை எனினும் ரூபா 431,604,720 இற்கான நிலுவை அங்காடிக் கடை வாடகை காணப்பட்டதால் வருமானப் பிரிவில் கடை வாடகை அறவீடு செய்வதில் முறையற்ற மற்றும் திறமையின்மை காணப் பட்ட தென அவதானிக்கப்பட்டது. | நிலுவை அங்காடிக் கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்காடிக் கடை வாடகை அறவீடு செய்வதற்கு முறை சார் நடவடிக்கை எடுப்பேன். |

## 2.4 மிகை விதிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய ஆட்களுக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்டுள்ள மிகை விதிப்புச் சான்றிதழ் ஒன்று தொடர்பாக 2019 ஜனவரி 31 திகதியில் உள்ளவாறு ரூபா 61,135 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | தொடர்ந்தும் அறவிடப் பட வேண்டிய ரூபா 61,135 இற்கான தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) துணை விதிகள்** | | |
| மாநகர சபை அதிகாரச் சட்டத்தின் 272 பிரிவின் கீழ் முக்கிய கருமங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்கவேண்டி இருந்ததுடன் கைத்தொழில்கள், கழிவுப் பொருட்கள் முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பான துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்க வில்லை. | கைத்தொழில்கள், கழிவுப் பொருட்கள் முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பாக துணை விதிகள் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய துணை விதிகள் சட்டப் பகுதிக்கு அனுப்பப் பட்டுள்ளது. |
| **(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்** | | |
| அனைத்துத் திணைக்களங்களும் உள்ளடங்கக் கூடிய விதமாக 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | சபையினால் ஒவ்வொரு திணைக்களத்தினாலும் நிறைவேற்றப்படும் கருமங்களை உள்ளடக்கி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் எதிர்காலத்தில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பேன். |
| **(இ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்** | | |
| 2018 ஆம் ஆண்டிற்கான நிர்மாண வேலைப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படாமையால் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிர்மாண வேலைகளின் எண்ணிக்கை மற்றும் கொடுப்பனவு களின் பெறுமதிகளை இனங்காண முடியாதிருந்தது. | நிர்மாண வேலை பதிவேடு சமர்ப்பிக்கப் பட வேண்டும். | பதில் எதிர்காலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சபை வருமானத்தில் 39 சதவீதம் செலவிடப்பட்டிருந்தமையால் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர சபை எல்லையுள் சேகரிக்கப்படும் குப்பைகள் சபை சொத்துக்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு செலவுப் பொறுப்பு ஒன்று மாத்திரம் ஏற்பட்டிருந்தது. | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கொழும்பு மாநகர சபையில் சேகரமாகும் குப்பைகள் முகாமைத்துவம் செய்யும் போது அதனது உரிய பெறுமதியினை பெற்றுக் கொள்வதற்காக இந்தக் குப்பைகள் வளமாக இனங்காணல் அதன் படி முறையான மீள்சுழற்சி ஒன்றிற்காக தொடர்புபடுத்தல் அவற்றிற்கு தேவையான வசதிகளை மேம்படுத்தல் பொது மக்களை அறிவுறுத்தல் மாநகர சபையினால் நீண்ட காலமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. |
| (ii) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக காணி ஒன்று கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை மொத்தம் ரூபா 130 மில்லியன் தொகை நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த குறிக்கோள்கள் நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2019 ஆகஸ்ட் மாதம் முதல் கெரவலபிடிய குப்பை செயற்களத்திற்கு திண்மக் கழிவுப் பொருள் ஏற்றுக் கொள்ள மறுக்கப்பட்டிருந்ததால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பை சேகரித்தல் மற்றும் அகற்றுதல் அலுவல்கள் சிக்கல் தன்மையான நிலைமைக்கு மாறியிருந்தது. | திண்மக் கழிவுப் பொருள் அகற்றுவதில் சிக்கல்களை தீர்ப்பதற்காக சபையினால் குறுகிய கால மற்றும் நீண்ட கால நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | குப்பை முகாமைத்துவ அலுவல்களுக்காக மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் நீண்டகால தீர்வு ஒன்று என கெரவலபிடிய Waste to Energy செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதால் கொழும்பு மாநகர சபைக்கான காணி ஒன்று கொள்வனவு செய்தல் தொடர்ந்தும் தேவைப்படாது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மாநகர சபையினால் குப்பைகளை சேகரித்தல், எடுத்துச் செல்லல், மீள்சுழற்சி மற்றும் அகற்றுதல் ஆகிய கருமங்கள் நிறைவேற்றப் பட்ட போதிலும் 2008 பெப்ரவரி 21 திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் கட்டளையின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை. | குப்பை சேகரித்தல், அகற்றுதல் என்பன நிறைவேற்றப்படுவதனால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டும். | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குப்பைகள் சேகரித்தல் கொழும்பு மாநகர சபையின் அடிப்படைப் பொறுப்பு ஒன்றாக இருப்பதால் கொழும்பு மாநகர சபை அரச நிறுவனம் ஒன்றாக இருப்பதனாலும் குப்பை சேகரித்தல் எடுத்துச் செல்லல், மீள்சுழற்சி மற்றும் அகற்றுதல் ஆகிய கருமங்களை நிறைவேற்றுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் தேவையொன்று ஏற்படாது. |

**(உ) சுற்றாடல் சிக்கல்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | பாரிய சுற்றாடல் பாதிப்பு ஒன்றினை ஏற்படுத்தும் இலத்திரனியல் கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதிவு செய்யப்பட்டிருந்த இலத்திரனியல் கழிவுப் பொருள் சேகரிக்கும் நிறுவனங்களுடன் இணைந்து நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | கொழும்பு மாநகர சபையினால் குறிப்பிட்ட இலத்திரனியல் குப்பைகள் சேகரிக்கும் நடைமுறை ஒன்று ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை ஒன்று எடுத்த போதிலும் இறுதித் தீர்மானம் ஒன்று எடுக்கப் படாமையால் தொடர் நடவடிக்கைக்கு பாரிய பாதிப்பு ஒன்று ஏற்படுத்தியுள்ளது. |
| (ii) | குப்பை சேகரமாவதை குறைத்தல், குப்பைகள் மீண்டும் பயன்படுத்தக் கூடிய நடைமுறை ஒன்றை அறிமுகப்படுத்தல், மீள்சுழற்சிக்கான முறையான மற்றும் விரைவான வேலைத் திட்டம் ஒன்று தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தாமல் இலங்கை காணி மீட்புசெய்தல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணி ஒன்றில் குப்பைகள் அகற்றப்படுதல் மேற்கொள்ளப்பட்டது. | குப்பை அகற்றுதல் தொடர்பான சிக்கல்களை தீர்ப்பதற்காக சபை விரைவாக குறுகிய கால மற்றும் நீண்ட கால நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரித்தல், அமுல் நடத்துதல் மற்றும் மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டும். | புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி திண்மக் கழிவுப் பொருள் சேகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வேன். |

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| | | |
|---|---|---|
| கொழும்பு மாநகர சபை நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிந்திருக்காததுடன் 2018 ஜுலை 31 திகதி வரையும் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு இருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விரைவில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் பின்னர் நிலுவையாக உள்ள ஆதனங் களை உரித்தாக்குவதற்காக 2017 ஜுன் 21 ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்ட போதிலும் 2019 பெப்ரவரி 25 திகதி வரை தேவையான அலுவல்கள் நிறைவேற்றப்பட்டி ருக்கவில்லை. | நிலுவை வீதவரி ஆதனங்களை உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அந்த அறிவித்தலின் பின்னர் தொடர்ந்தும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமல் காணப்பட்ட ஆதனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவ துடன், அவ்வாறு உரித்தாக் குவதற்காக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுதலும் மேற்கொள்ளப்பட வேண்டும். திருத்திய பட்டியல் தயாரித்தல் நடைபெற்ற போதிலும் உள்ளுராட்சி நிறுவனங்களின் தேர்தல் 2018 ஜனவரி மாதம் நடைபெற்றதால் புதிய சபை கூடும் வரை தாமதிப்பதற்கு நேரிட்டது. 2017.12.31 திகதியில் உள்ளவாறு ரூபா 500,000 இற்கு மிகையாக உள்ள மீதிகளை அடிப்படையாக கொண்டு 2019 ஆண்டின் போது ஏலவிற்பனை செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிடுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபையினால் விற்பனவுச் சான்றிதழ் எழுதுவதற்காக 2003 முதல் 2016 வரை இனங்கண்டிருந்த ரூபா 214,628,001 இற்கான நிலுவை கொடுப்பனவு காணப்பட்ட 193 ஆதனங்கள் தொடர்பாக சபையில் போதியளவு சான்றுகள் காணப்படாமையால் ஆதனங்களை உரித்தாக்கும் அலுவல்கள் மேற் கொள்வதற்கு முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது. | நிலுவை வீதவரி ஆதனங்களை உரித்தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போதைய நிலைமை மற்றும் எவரினால் அனுபவிக் கப்படுகின்றது போன்ற தகவல்கள் வருமானப் பரிசோதக உத்தியோகத்தர் களிடம் கோரியுள்ளோம். நிலுவை செலுத்தாமையால் தடை செய்யப்படும் ஆதனங்களில் உரித்துறுதிகள் மற்றும் வரைபுகள் கண்டறிய முடியாமையால் அந்தத் தகவல்கள் கண்டறிவதற்காக வேறு மாற்று வழிகள் இன்மையால் விற்பனை சான்றிதழ்கள் எழுதுவதில் தாமதம் ஏற்பட்டது. |
| (இ) | சபையினால் 2007 ஆண்டின் பின்னர் நிலுவை வீதவரி ஆதனங்கள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் ஒன்று 2014 ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்டிருந்தது. | நிலுவை வீதவரி தொடர்பாக கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2007 மற்றும் 2014 ஆண்டு களுக்கு இடையே ஆதனங் களை தடைசெய்வதற்காக வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வழங்கி இருக்காத துடன் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252 இன் கீழ் நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக பற்றாணை அங்கீகாரப் பத்திரம் ஒன்று வெளியிடப் பட்டது. அந்தப் பற்றாணை யை செயற்படுத்தியமை யினால் சில ஆதனங்களுக் காக காணப்பட்ட நிலுவை சேகரிக்க முடியுமாக இருந்தது. |
| (ஈ) | வீதவரி செலுத்தாமையின் காரணத்தினால் வீதவரி இலக்கம் 43,பான்ஸ் இடம், கருவாத்தோட்டம் என்ற இலக்கத் தில் அமைந்துள்ள 154.43 பர்சஸ் கொண்ட காணி 1974 ஆம் ஆண்டின் போது கொழும்பு மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்ட போதிலும் 2019 ஏப்ரல் மாதம் வரை அந்தக் காணியின் அனுபவித்தலை நகர சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணியின் அனுபவித்தலை நகர சபைக்கு உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர சபையினால் வெளியேற்றுவதற்கான கட்டளை தொடர்பாக நீதிவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு இருந்ததுடன் இந்த ஆதனங்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத் தில் வழக்கொன்று காணப்படுவதால் அந்த வழக்கு விசாரணை செய்யப் படவில்லை. |

**3.3 முகாமைத்துவத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|

| | --- | --- | --- |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக 596 முறைப்பாடுகள் கிடைத்திருந்த துடன் அவற்றில் 141 முற்றாக அங்கீகாரமற்ற நிர்மாணவேலை கள் மற்றும் 214 பாதி அளவு அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் ஆகும். மீதியாக உள்ள அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளில் 74 இற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் மீதியான 160 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் பாதியானவையா அல்லது முழுமையானவையான என பிரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் மீது மாத்திரம் நகர சபை செயற்பட்டுள்ளது. | அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடு கள் மாத்திரம் அன்றி சபையினாலும் அங்கீகாரமற்ற வேலைகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகரிக்கும் செயற்பாடுகளை பூரணப்படுத்தி இருக்காத நிர்மாண வேலைக்காக ஞாபகப்படுத்தல் கடிதங்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது 2017 ஆண்டு முதல் பதிவு செய்திருந்த கோவைகளுக்காக ஞாபகப்படுத்தல் கடிதங்கள் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 2018 ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டி ருந்த அபிவிருத்தி அனுமதிப்பத்திர நடைமுறையை கணினி மயப்படுத்தியதன் மூலம் தொடர் நடவடிக்கைக்கு வசதியாக உள்ளது. |
| (ஆ) | சுதுவெல்ல பிரதான களஞ்சியத்தில் 2011 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற ரூபா 2,102,784 இருப்புக் குறைவிற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய ஒரு அலுவலகரிடம் அறவிடப்பட வேண்டிய இருப்புக் குறைவினை கைவிடும் படி நிதி தொடர்பான நிலையான குழுவினால் எடுக்கப் பட்டிருந்த தீர்மானத்திற்கு மேல்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் களிடம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | "GO GREEN COLOMBO" நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக 2018 ஜூலை 23 ஆம் திகதிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ள 06 பரிந்துரைகள் தொடர்பாக 2019 மே 09 ஆம் திகதி வரை நடவடிக்கை ஏதும் எடுத்திருக்க வில்லை. | உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர திட்டமிடல் பிரிவில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 97 ஆகும். | குறிப்பிட்ட வெற்றிடங் களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நகர திட்டமிடல் பிரிவில் காணப்படும் வெற்றிடங் களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் படி விண்ணப்பித்து உள்ளூராட்சி ஆணையாள ருக்கு அறிவித்த பின்னர் உள்ளூராட்சி ஆணையாளரி னால் அமைச்சுச் செயலாள ருக்கு அறிவித்துள்ளார். தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்பு வதற்கு விண்ணப்பித் துள்ளேன். |
| (ஆ) | நகர பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 03 பதவிகளில் 08 வெற்றிடங்கள் காணப்பட்டன. | குறிப்பிட்ட வெற்றிடங் களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் வெற்றிடங்களை நிரப்பு வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் படியும் அதற்கான அங்கீகாரத்தை வழங்கும் படியும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்துள்ளேன். |
| (இ) | தருமநிதி திணைக்களத்தில் 04 பதவிகளில் 84 வெற்றிடங்கள் காணப்பட்டன. | குறிப்பிட்ட வெற்றிடங் களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | Relief Officer - இந்தப் பதவியின் நியமன அதிகாரி மாகாண பகிரங்க சேவை ஆணைக் குழு ஆகும்.<br>Pre School Teacher - இந்தப் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டு எழுத்துப் பரீட்சை பெறுபேறுகளின் மீது உள்ளக விண்ணப்பதாரி ஒருவருக்கு 2018.09.03 முதல் முன்பள்ளி ஆசிரியர் பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டது. எழுத்துமூல பரீட்சையின் பெறுபேறுகள் மீது வெளிவிண்ணப்பதாரி 23 பேருக்கு 2019.04.06 ஆந் திகதி முதல் முன்பள்ளி |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆசிரியர் பதவிக்கான நியமனங்கள் வழங்கி இருந்ததுடன் 2019.06.17 முதல் இரண்டு பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது.<br>Sewing Instuctor - இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு உள்ளகத்தினால் விண்ணப் பங்கள் கோரப்பட்டிருந்த துடன் அடுத்த மாதம் அளவில் உள்ளக நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>வெளியால் ஆட்சேர்ப்பதற்கு விளம்பரம் தயாரிக்கப் பட்டுள்ளது.<br>Attendant - இந்த பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு பத்திரிகை விளம்பரம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 04 மாவட்ட அலுவலகங்களின் 99 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 12 வருடங்களுக்கும் 39 இற்கும் இடைப்பட்ட காலவீச்சில் உள்ளக இடமாற்றம் பெறப்படாமல் நீண்ட காலமாக ஒரே இடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார் என அவதானிக்கப்பட்டது. | இடமாற்றல் கொள்கை செயற்படுத்தப்பட வேண்டும். | கொழும்பு மாநகர சபைக் காக இடமாற்றக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ள துடன் அதனை 2020 ஆண்டு முதல் செயற்படுத்த ப்படும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | சொத்துக்களின் வகை | பெறுமதி (ரூபா) | விளைவற்றுக் காணப்பட்ட காலப்பகுதி | | |
| (அ) | கருங்கற்கள் ½ மீற்றர் 3500 கியூப்கள் | - | 01 வருடம் | எதிர்காலத்தில் வினைத்திறனுடன் மூலப் பொருட்கள் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மிகை | பதில் எதிர்காலத்தில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |
| | கருங்கற்கள் ¾ மீற்றர் 1000 கியூப்கள் | - | 01 வருடம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Dust மீற்றர் 1000 கியூப்கள் | - | 01 வருடம் | இருப்பு பேணப்படல் மேற்கொள்ளப்படக் கூடாது. | |
| (ஆ) | கொழும்பு 14 மாதம்பிட்டிய, 350 தோட்ட விழா மண்டபம் | 42,880,634 | 11 வருடங் கள் | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோக த்தர்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். விளையாட்டு மற்றும் அபிவிருத்தி திணைக் களத்தினால் விழா மண்டபம் திறக்கப்பட்டு பொது மக்களின் தேவைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். புதிய இருமாடிக் கட்டிடத்தின் வரி இன்றிய ஒப்பந்தத் தொகை ரூபா 38,286,281 தொகை ஆகும். அதன் படி அறவிடப்பட வேண்டிய மொத்த தாமதக் கட்டணம் ரூபா 3,828,628.10 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், புதிய கட்டிடத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | மரத்தின் கட்டமை ப்பை பரிசோதனை செய்யும் இயந்திரம் | 7,400,000 | 4½ வருடம் | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோக த்தர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடாத்தப் பட வேண்டியதுடன், பயன்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | இதற்குரிய கணக்காய்வு ஐய வினா தொடர்பாக $WNP_2$/CB/ D/CBD/CMC/2017/16 இதற்கான பதில் 2019 ஏப்ரல் 16 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப் பட்டிருந்தது. |
| (ஈ) | முதியோர் இல்லத் திற்கு சொந்தமான 02 வாகனங்கள் | -- | 5 வருடங் களை மிகைத்து ள்ளவை | அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 227-3013 மற்றும் GD-3083 இலக்கங்களைக் கொண்ட 02 வாகனங்களும் முதியோர் இல்லத்தின் அலுவல்களுக் காக பயன்படுத்தப்பட்டதுடன், அடிக்கடி திருத்த வேலைகள் மேற்கொள்ள நேரிட்டதால் திருத்த வேலைக்காக பாரிய தொகையொன்று செலவிடு வதற்கு நேரிட்டமையால் பாவணையில் இருந்து அகற்றுவதற்கு தீர்மானிக்கப் பட்டது. இந்த வாகனங்களின் அப்புறப்படுத்தம் அலுவல்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் பணிப்பாளர் பொறியியலாளர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | (நகர வேலைத் தளம்) மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (உ) | கொழும்பு 12 பெரடயிஸ் இடத்தில் லொன்டரி வளவில் நிர்மாணித்துள்ள 64 வீடுகள் | 200,863,837 | 3 வருடங் களை மிகைத் துள்ளவை | இந்த வீடமைப்பு தொடர் கட்டிடம் வதிவோருக்கு மற்றும் குறைந்த வருமானம் உடைய வீடற்ற பொது மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 64 வீடுகளைக் கொண்ட இந்த வீடமைப்புச் செயற் திட்டம் மாநகர சபை அங்கீகாரத்தின் மீது நிர்மாணி க்கப்பட்டதுடன் அந்த வீடுகள் இந்த வளவில் உள்ள வீடுகள் உடைத்து அகற்றிய சந்தர்ப்பத்தில் வசித்து வந்த ஆட்களுக்கு மற்றும் கொழும்பு நகரத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஒப்படை க்கும் அதிகாரம் சபைக்கு உரியது. அதன் பிரகாரம் இந்த வீடுகளை வழங்கும் அலுவல்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. |
| (ஊ) | 200 பக்கி கடைகள் | 5,865,000 | 3 வருடங் களை மிகைத்தது | இந்த பக்கி கடைகளை பயன்தரு அலுவல்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். | நகர அலங்கார வேலைத் திட்டத்தின் கீழ் முறைசார் விதமாக அங்காடிக் கடை தொகுதிகள் ஒரே மாதிரியாக அங்காடி வியாபாரிகளுக்கு வழங்குவதற்காக பக்கி கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அந்த பக்கிகளை பெற்றுக்கொள்வதற்காக வியாபாரிகள் மறுப்புத் தெரிவித்ததனால் ஆக்கபூர்வ மான கருமங்களுக்காக பயன் படுத்த முடியாமல் போனாலும் அந்த பக்கி கடைகளை வேறு பொது சந்தைத் தேவை களுக்கு பயன்படுத்துவதற் காக திட்டம் இடப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ) | 2018 ஏப்ரல் 18 ஆம் திகதி கொள்வனவு செய்து சதுருஉயன வளவில் பொருத்தப் பட்டிருந்த சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் | 27,237,359 | 1 வருடம் | குறைபாடுகளை நிவர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்புவதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 சொத்துக்கள் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உயர்ந்த சந்தைப் பெறுமதி ஒன்றினை உடைய 16 ஆதனங்களை தற்போது அனுபவித்து வரும் தரப்பினர் தொடர்பாக சபை அறிந்திருக்காததுடன் அங்கீகாரம் இன்றி கைப்பற்றியது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரமற்ற கைப்பற்றல் தொடர்பாக சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | முகத்துவாரம் Elie House காணியின் 50 பர்சஸ்கள் 1992 ஜுலை மாதம் ஸெமட சரண நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் காணியில் மீதியான 60 பர்சஸ்களில் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ஸெமட சரண நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | அங்கீகாரமற்ற கைப்பற்றல் நிர்மாண வேலைகள் தொடர்பாக சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான எளி ஹவுஸ் காணியின் 50 பர்சஸ்கள் 1992 ஜுலை மாதம் ஸெமட சரண நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த காணியின் மீதியான 60 பர்சஸ் அளவு அங்கீகாரமின்றி இந்த நிறுவனத்தினால் தமது தேவைகளுக்கு பயன் படுத்தப்பட்டு வருகின்றது. நிறுவனத்தினால் அனுபவித்து வரும் அந்த மீதி காணி அளவு தொடர்பாக 1992 ஆண்டு முதல் நிலுவைத் தொகையை அறவீடு செய்யும் அடிப்படையில் குத்தகைக்காக வழங்குவதற்கு வரைபுப் பிரரேணை ஒன்று சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

### 3.5.3 காலவதியான இருப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காலவதியான ரூபா 3,685,125 இற்கான தர்மோ பிளாஸ்டிக் 22975 கி.கிராம். தொகையொன்று களஞ்சிய ங்களில் தடுத்து வைக்கப்பட் டிருந்ததுடன் இந்த தொகையில் 10000 கி.கிராம் 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்திலேயே காலவதியாகி இருந்தது. | முறையான விசாரணை ஒன்று பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக மேற்கொள்ளல் மற்றும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |

### 3.6 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் நகர தொழிற்சாலை இலெக்ர்டிகல் பிரிவிற்கு 02 ஸ்னோகல் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்காக பண ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 திகதி வரையும் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2018 ஆம் ஆண்டின் போது 3 ஸ்னோகல் வாகனங்கள் வாடகைக்கு பெற்று அதற்காக ரூபா 6,477,641 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்தலை தாமதித்தல் தொடர்பாக உயர் முகாமைத்துவத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். | கூறுவிலை அழைத்த சந்தர்ப் பத்தில் வழங்குனர்களினால் கேட்டிருந்த விவரக் குறிப்பு களுக்கு இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் வழங்கியிருந்த இயந்திரங் களில் பல வித்தியாசங்கள் காணப்பட்டமையால் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் பரிந்துரை வழங்குவதில் தாமதம் ஆகி இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நகர தொழிற்சாலைக்கு சொந்த மான 44 வாகனங்கள் மற்றும் 20 இயந்திர உபகரணங்களுக்காக 2018 ஆண்டின் போது ரூபா 7,324,822 இற்கான எரிபொருள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் ஓட்ட அட்டவணைகள்/ அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை. | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் குறிப்பிட்டுள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தற்போது நகர கைத்தொழிற் சாலையில் பயன்படுத்தப் படும் வாகனங்கள் இயந்திரங்கள் சிலவற்றிற்கு மாத்திரம் சாரதிகள் ஓட்ட அட்டவணைகள் எழுதப்படுவதுடன் அவற்றிலும் சில முறைசாரா விதமாக பேணப்பட்டு வருகின்றது என கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளது சரியானதாகும். |
| (இ) | 2018 ஆரம்ப அரையாண்டில் 13 பிரிவுகளின் வாகனங்களுக்காக ரூபா 62,459,278 பெறுமதியான எரிபொருள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புக்கள் குறிப்பிட்டுள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | எரிபொருள் வழங்கள் பதிவேட்டின் படி 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப அரையாண்டில் 20 பிரிவுகளை சேர்ந்த 303 வாகனங்களுக்காக எரிபொருள் வழங்கப்பட்டிருக்க வில்லை. | இந்த வாகனங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | முற்கலவை செயற்களத்திற்கு சொந்தமான பயன்படுத்தப்படாத வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் 50 நீண்ட காலமாக இயற்கை அனர்த்தங் களுக்கு ஆளாகிக் காணப்படுவதுடன் அவற்றை திருத்துவதற்கு அல்லது அப்புறப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்துவதற்கு அல்லது அப்புறப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 செப்தெம்பர் 30 ஆம் திகதிய 08 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சுற்றறிக்கை யின் பிரகாரம் அரச முகவராண்மைக் கணக்கு களுக்காக பேணப்படுகின்ற விஷேட கணக்குகளில் இருந்து | அங்கீகரிக்கப்பட்ட இனங்கண்ட செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். | மேற்கூறிய விஷேட வங்கிக் கணக்குகளில் இருந்து கிடைக்கும் திட்டமிடல் குழு வருமானம் முகவராண்மைக் கணக்கிற்கு உட்படுத்தப் பட்டு இருந்ததுடன் ஏனைய |

| | | | |
|---|---|---|---|
| | பணம் திருப்பிப் பெறுதல் நகர சபையினால் இனங்காணப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டம ஒன்றிற்காக மாத்திரம் எனினும் அவ்வாறான செயற் திட்டங்களை இனங்காணாமல் மொத்தம் ரூபா 877,355,187 இற்கான தொகை திருப்பி எடுக்கப்பட்டிருந்தது. | | பெறுவனவுகள் (VAT, ஏனைய வரிகள்) பின்னர் பிரதான கொடுப்பனவுக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. அதே போல் நடைமுறைக் கணக்கில் செயற்படாது காணப்படும் பணத்தை முதலீடு செய்து அதன் மூலம் நகர சபைக்கு வருமானம் ஒன்று உழைத்துள்ளது. |
| (ஆ) | நகர கைத்தொழிற்சாலையில் மேற் கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 10 உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை நாள் கொடுப்பனவு செலுத்தும் போது விரல் அடையாளப் பதிவின் படி உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் ஒரே நேரம் குறிப்பிடப்பட்ட 68 நாட்களுக்காக ரூபா 255,669 தொகை செலுத்தப் பட்டிருந்தது. | கொடுப்பனவுக்காக சரியான உறுதிப் படுத்தல் தேவைப் படுகின்றது. | 2019 ஆம் ஆண்டு முதல் வெளிச்செல்வதற்காக கட்டாயமாக வெளிச்செல்லல் பதிவேட்டில் கிழமை நாட்களில் மாத்திரம் அன்றி சனி மற்றும் விடுமுறை நாட்களிலும் பதிவு செய்து வெளிச்செல்ல வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2018 ஆண்டு திசெம்பர் மாதம் நகர கைத்தொழிற்சாலையின் 15 உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு மேற் கொள்ளல் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது விரலடையாள இயந்திரத்தின் படி மேலதிக நேர வேலை மணித்தியாலம் 74 ஆக இருந்த போதிலும் மேலதிக நேர வேலை கொடுப்பனவுக்காக பயன்படுத்தப் பட்டிருந்த காலம் 2900 மணித்தியாலங்கள் ஆகும். இதன் பிரகாரம் விரலடையாள இயந்திரத்தில் பதிவு செய்யப்படாத மேலதிக நேரம் 2826 மணித்தியாலங்கள் உடன் மொத்தமாக 2900 மணித்தியாலங் களுக்காக ரூபா 309,104 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பாய்விற்காக சரியான உறுதிப் படுத்தல்கள் காணப்பட வேண்டும். | கொழும்பு மாநகர சபை நகர ஆணையாளரின் 2015.09.29 திகதிய நாலே/சக்ரலேக/20/2015 இலக்கங் கொண்ட உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிக்கள உத்தியோகத்தர் கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள கடமைகளில் ஈடுபடும் ஊழியர்களின் உள்வருதல் வெளிச்செல்லல் தொடர்பாக அறிவுரை வழங்கியுள்ள சுற்றறிக்கை யின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்படுவதனால் விரலடையாள இயந்திரத்தின் மூலம் பதிவு செய்யப்படும் மேலதிக நேரம் எண்ணிக்கை மேற்கொள்ளப் பட்ட மேலதிக நேர மணித்தியாலங்களின் இடையே வித்தியாசம் ஒன்று காணப்படுகின்றது என கருணையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 3.8 பெறுகைகள்

### 3.8.1 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டின் போது டென்டர் அழைக்கப்பட்டு முற்கலவை செயற்களத்திற்காக மூன்றுமாடி அலுவலக கட்டிடம் நிர்மாணிப் பதற்காக ரூபா 37,121,963 இற்கான பெறுமதி கூட்டிய வரி இன்றி தொகைக்கு 2016 பெப்ரவரி 9 ஆம் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், 2016 ஒக்தோபர் 26 நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன், 04 சந்தர்ப்பங்களில் காலநீடிப்பு செய்யப்பட்டிருந்தது. இங்கு கணிசமான காலதாமதத்தின் பின்னரே காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு பதிலாக பிரதி நகர ஆணையாளர் (பொறியியல் சேவை) மற்றும் செயற்திட்ட பொறியியலாளர் ஆகியோரின் சுயவிருப்பின் படி காலநீடிப்பு செய்யப்பட்டதுடன் சபை இழந்துள்ள தாமதக் கட்டணம் ரூபா 3,712,196 தொகை ஆகும். காலநீடிப்பு செய்யும் போது செயலாற்றுகை பிணை முறியின் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | காலநீடிப்பு நியாயமான காரணத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவ்வாறின்றேல் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் அனைத்து நிர்மாண வேலை தொடர்பாகவும் வரைபுகளின் வித்தியாசங்கள் தொடர்பாக உரிய கோவைகளில் பதிவு செய்வதற்கு உத்தியோகத்தர் களை அறிவுறுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தேன். ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் வேலைத் தளத்தில் ஏற்படும் தாமதங்கள் காரணமாக காலநீடிப்பு அங்கீகரிப்பதற்கான அங்கீகாரம் பொறியியலாளருக்கு உண்டு. தாமதக் கட்டணம் அறவிடப்படாவிடினும் ஒப்பந்த தொகையை அதிகரிப் பதற்காக நடவடிக்கை எடுக்காமல் சபைக்கு அனுகூலமான நிலைமை ஏற்படுத்தியுள்ளது. காலநீடிப்பின் பிரகாரம் செயலாற்றல் பிணைமுறி காலத்தை நீடிக்குமாறு அனேக ஒப்பந்தக்காரர் களுக்கு அறிவித்த போதும் செயலாற்றல் பிணைமுறியின் காலநீடிப்புச் செய்யப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ஆ) | (i) முற்கலவை செயற்களத்திற் காக CCTV முறைமை ஒன்று பொருத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு ரூபா 1,052,000 தொகை 2015 பெப்ரவரி 16 ஆந் திகதி செலுத்தியிருந்த போதிலும் பராமரிப்பு மற்றும் திருத்த வேலை அலுவல்களுக்காக பராமரிப்பு உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகி இருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கமரா பொருத்தப்பட்ட நிறுவனத்தினால் அதற்கான உத்தரவாத காலத்தில் ஏற்பட்ட வழுக்கள் நிலைமை களின் போது அது தொடர்பாக அறிவித்த போதிலும் அந்த தவறுகளை சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் அந்த நிறுவனங் களுடன் பராமரிப்பு உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படவில்லை எனவும் நகர சபை ஊழியர்கள் மூலமாகவும் பராமரிப்பு |

| | | |
|---|---|---|
| | | வேலைகள் மேற் கொள்ளப்பட்டன. |
| (ii) 2018 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் அளவில் முற்கலவை செயற்கள 16 கமராக்களில் 05 கமராக்கள் மாத்திரம் செயற்பட்டதுடன் 11 கமராக்கள் கழற்றி அகற்றப் பட்டிருந்தது. | வளங்களை ஆக்க பூர்வமாக வினைத் திறனுடன் பயன் படுத்தப்படாமை யால் பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் களிடம் அதற்கான காரணங்களை வினவ வேண்டும். | கணக்காய்வு சந்தர்ப்பத்தின் போது 05 கமராக்கள் மாத்திரம் செயற்பட்டிருந்த துடன் 08 கமராக்கள் கழற்றப்பட்டிருந்தன. மீதி 03 கமராக்கள் பொருத்தப்பட்ட இடத்திலேயே காணப்பட்டன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 100,000 விட கூடிய வருமானத்தை எதிர்பார்க்கும் ரூபா 886,400,000 இற்கான மதிப்பீட்டுப் பெறுமதி உடைய 47 வரவு விடயங்களின் மூலம் வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை. அவற்றில் கழிவுநீர் பிரிவிற்குரிய 31 வரவு விடயங்கள் அடங்கி இருந்ததுடன் மொத்தப் பெறுமதியில் அவை நூற்றிற்கு 83 சதவீதத்தைக் கொண்டிருந்தது. | சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஆண்டின் போது உழைக்க வேண்டிய வருமானத்திற்கு நெருக்கமாக மதிப்பிடப்படு வதுடன் அந்தப் பெறுமதியை அறுதியாக எதிர்வுகூற முடியாது. சில வருமானங்கள் உழைக்கும் எதிர்பார்ப்புடன் பாதீட்டில் உட்படுத்திய போதிலும் பல்வேறு சிக்கல்கள் காரணமாக அந்த வருமானங் களை சேகரிப்பதற்கு முடியாதிருந்தது. |

### 4.2 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட கணக்கிடக் கூடிய பெறுமதி ரூபா 167,521,046 தொகைக்காக 12 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பி இருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்காக விரைவாக பதில் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். |

**4.3 மாகாண அரச கணக்குக் குழுக் கூட்ட கட்டளைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண அரச கணக்கு குழுக் கூட்டங்களில் வழங்கியிருந்த எட்டு கட்டளைகளை 2018 திசெம்பர் 31 திகதி வரை செயற்படுத்தி யிருக்கவில்லை. | மாகாண கணக்குக் குழு கூட்டக் கட்டளை களை செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |